முதியோர் பராமரிப்பிற்கு வழிகாட்டும் ஒரு புதிய ஆய்வு நூல்

முதியோர் பராமரிப்பிற்கு வழி காட்டும் ஒரு புதிய ஆய்வு நூல் வெளியிடப்பட்டு இருக்கிறது. முதியோருக்குப் பராமரிப்புச் சேவையை வழங்குவோர் எதிர் நோக்கக்கூடிய பிரச்சினைகளை ஆராய்ந்து அவற்றுக்குரிய தீர்வு களை அந்த நூல் எடுத்துக் கூறு கிறது.

இந்த நூலின் இரண்டாவது பகுதி இப்போது வெளியிடப்பட்டு இருக்கிறது.

'மூப்படையும் சமூகத்தில் முதி யோர் பராமரிப்பு' என்ற அந்த நூலை இணையத்திலேயே படிக்க லாம். சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகத்தின் யோங் லூ லின் மருத்துவப் பள்ளியின் மருத்துவ உயிரியல் நியதிநிலையம் அந்த நூலை உருவாக்கி இருக்கிறது.

சமூகத்தில் முதியோரைப் பரா மரிப்பதில் பல்வேறு வகை குழு வினரும் எதிர்நோக்கக்கூடிய நியதிகள் தொடர்பான அன்றாட சவால்களில் அந்த நூல் ஒருமித்த கவனம் செலுத்துகிறது.

பொது சுகாதார வல்லுநர்களின் கருத்துகள் அதில் உள்ளன. உள் ளூர் சுகாதாரப் பராமரிப்பு, சமூகப் பராமரிப்பு நிபுணர்களின் கருத்து களும் அந்த நூலில் அடங்கி இருக்கின்றன.

பொது சுகாதாரத் தகவல்கள் தொடர்பான பின்னணி தகவல் களும் அதில் உள்ளன. மருத்துவ நிபுணர்களுக்கு உரிய போதனை, கற்றல் வழிகாட்டி நெறிமுறைகளும் நூலில் இருக்கின்றன.

இந்தப் பல்கலைக்கழகத்தின் யோங் லூ லின் மருத்துவ பள்ளி யின் இணைப் பேராசிரியர் ஜாக் லின் சின் இந்த நூலை பிரிட்டனில் இருக்கும் இத்தாக்ஸ் நிலையத் தைச் சேர்ந்த கல்விமான்கள், அமெரிக்காவில் இருக்கும் ஹாஸ் டிங்ஸ் சென்டரின் கல்விமான்கள் ஆகியோருடன் சேர்ந்து உருவாக்கி இருக்கிறார்.

இந்தப் பேராசிரியர் 2011ல் ஆய்வு அறிக்கை ஒன்றைத் தயார் செய்தார். நோய் முற்றி மரணத்தை எதிர்நோக்கக்கூடிய முதியவர் களுக்கு மருத்துவச் சேவை வழங்குகின்ற நிபுணர்கள் எதிர் நோக்கும் தார்மீக மனவேதனை களை அப்போது அவர் தெரிந்து கொண்டார். அதுவே இந்த நூல் உருவாக காரணம்.

இந்த நூலில் அடங்கியிருக்கும் ஒவ்வோர் ஆய்வும் தனிப்பட்ட ஒருவரின் உண்மை வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டது. அவருக்குச் சுகாதாரப் பராமரிப்பு, சமூகப் பராமரிப்பு வழங்கிய நிபுணர்களின் அனுபவங்களைப் புத்தகம் எடுத்துக் கூறுகிறது.

முதியவர்களைப் பராமரிக்க அமர்த்தப்படும் வெளிநாட்டு பணிப்பெண்களின் அனுபவம், முதியோருக்கான தொண்டூழியத் தோழர்களின் பணி, முற்றிய நோய்களை முதியோர்கள் எப்படி சமாளிக்கிறார்கள் என்பது பற்றிய விவரங்கள் இந்த நூலில் இடம்பெற்றுள்ளன.

இந்த நூலுக்காகத் தாதியர், உடற்பயிற்சி நிபுணர்கள், சமூக ஊழியர்கள் உள்ளிட்ட 180க்கும் மேற்பட்ட நிபுணர்களுடன் ஆய்வுக் கல்விமான்கள் பேசினர்.

இந்த ஆய்வு ஒன்றரை ஆண் டுக்கும் மேலாக நடந்தது. பிறகு ஒவ்வொரு சம்பவம் பற்றிய ஆய் வும் மருத்துவ பட்டத் தொழிலர் களுடன் விவாதிக்கப்பட்டு அவை முதியவர்களும் அவர்களுக்குப் பராமரிப்புச் சேவையை வழங்கு வோரும் எதிர்நோக்கக்கூடிய சவால்களை உண்மையாகப் பிரதிபலிக்கின்றனவா என்பது உறுதிப்படுத்தப்பட்டது.

ஓர் அங்காடி நிலையத்தில் திரு கோ என்ற முதியவருக்கும் திரு ரஷித் என்ற அங்காடிக் கடைக்காரருக்கும் இடையில் நடந்த சம்பவம், திரு சோ என்ற முதியவருக்கும் அவருடைய தொண்டூழிய தோழரான சென் குப்தா என்பவருக்கும் இடையில் வீவக வீடு ஒன்றில் நிகழ்ந்த சம் பவம் ஆகியவற்றை இந்த நூலில் இடம்பெற்றுள்ள ஆய்வுச் சம்பவங் களுக்கு எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம்.

"நோயாளிகள், குடும்பங்களு டன் சிரமமான முடிவுகளை எடுப் பது" என்ற முதல் புத்தகம் 2014ல் வெளியிடப்பட்டது. மருந்தகச் சூழலில் மருத்துவர்கள் எதிர் நோக்கக்கூடிய பிரச்சினைகளில் இந்த முதல் நூல் ஒருமித்த கவனம் செலுத்தியது.

புதிய ஆய்வு நூல் அதிகார பூர்வமாக இன்று ஷா ஃபவுண் டேஷன் அலும்னை ஹவுசில் வெளியிடப்படும். இந்த நூலை www.bioethicscasebook.sg என்ற முகவரியில் காணலாம்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.